# ''இலங்கைத் தமிழர் வீணையிசை''
# ஒரு வரலாற்று ரீதியான விமர்சன ஆய்வு

LIBRARY
24 NOV 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

திருமதி.கௌரிமலர் மகேந்திரன்
EU/PGS/2011/M.phil/(FA)/13

M.phil05
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை
கலை கலாசார பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்
வந்தாறுமூலை
இலங்கை

2015

PROCESSED
Main Library, EUSL

## பொருளடக்கம்


பக்கம்

நன்றியுரை

முன்னுரை

இயல் ஒன்று (1-14)

1.1அறிமுகம்

1.2ஆய்வுப்பிரச்சினை

1.3ஆய்வின் முக்கியத்துவம்.

1.4ஆய்வின்கருதுகோள்

1.5ஆய்வின்நோக்கம்

1.6இலக்கியமீளாய்வு

1.7ஆய்வுமுறையியல்

1.8ஆய்வுத்தரவுகள்.

1.9ஆய்வுவரையறை

1.10.ஆய்வின்அமைப்பு

1.11.நீண்டகாலப் பயன்கள்.

இயல் இரண்டு: 15-51

அ.கலை.

ஆ.கலைகளின் பிரிவு.

இ.இசைக்கலை.

ஈ.கலைகளின்தோற்றம்.

உ.இந்திய இசையில் கர்நாடகயிசை.

ஊ.வீணையிசை.

2.1.1.இலங்கை எனும் பெயர் பெற்றமை.

2.1.2. இலங்கையை இராவணன் ஆண்டதானபுராதனகாலத்தில் வீணையிசை.

2.1.2.1.திருகோணமலைதிருத்தலயாத்திரை.

2.1.2.2.தேவாரம் ,பிரபந்தம்.

2.1.2.3.விநாயகர் புராணம்.

2.2.வீணையின் தோற்றம் வளர்ச்சி.

2.2.1.பி.சைதன்யதேவாவின் ஒருநரம்புக் கருவியிலிருந்துபலநரம்புக்கருவிகளி னூடானவீணையின் தோற்றம்.

2.2.2.ஸ்ரீவித்யாஅவர்களின்ஆரம்பகாலவில்வடிவ இசைக்கருவிகளிலிருந்துவீணைவரை.

2.2.3.சங்க இலக்கியங்கள்,அதனைத் தொடர்ந்தகால இலக்கியங்களினூடானவீணையின் தோற்றம்.

2.2.3.1.சங்ககால இலக்கியங்களில்.

(அகநானூறு, புறநானூறு, பரிபாடல், சிறுபணாற்றுப்படை,மலைபடுகடாம்.)

2.2.3.2.அறநெறிக்கால இலக்கியங்களில்.

(திணைமொழிஐம்பது,திணைமாலைநூற்றைம்பது, திருக்குறள்,பஞ்சமரபு)

2.2.3.3.காப்பியங்களில்.

(1.சிலப்பதிகாரம். 2.மணிமேகலை. 3.சீவகசிந்தாமணி. 4.திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம்.)

2.2.3.4.பல்லவர்காலம்.

(தேவாரங்கள்:1.திருநாவுக்கரசர்2.திருஞானசம்பந்தர்3.பல்லவகால மன்னன்)

2.2.3.5.சோழர்ககாலம்.

(கம்பராமாயணம்,கரணாம்ருதசாகரம்,தஷிணகைலாசபுராணம்,பெரியபுராணம்)

2.2.3.6.பத்தொன்பதாம் நூற்றாண்டு.

(1.விபுலாளந்தர்2.ஞானாகுலேந்திரன்3.அருணாசலம்4.அங்கயற்கண்ணி.

5.யாழ்வழக்கொழிந்தமை, 6.வீணைநிலைத்தமை.)

2.2.3.7.இருபதாம் நூற்றாண்டு.

இயல் மூன்று . 51-96

**வீணைஉருவத்தின்பரிணாமவளர்சியும்அதனூடானசுரங்களின்தோற்ற வளர்சியும் வீணைவகைகளும்.**

3.1.1.வீணை உருவத்தின் பரிணாமவளர்ச்சியும் சுரங்களின் தோற்றவளர்சியும்.

3.1.2வீணையின் தோற்றம்பற்றிய தெய்வீக சிந்தனைகள்.

3.1.3வீணை இசைக்கருவியின் வகைகள்.

3.1.4.பிரதேசரீதியானவீணை வகைகள்.

3.1.5.கோவிற் சிற்பங்களில் காணப்படும் வீணையின் வடிவங்கள்.

3.2 வீணையின்
அறிமுறை,செயன்முறைஅதன்சிறப்பம்சங்கள்,சம்பந்தமானவிடயங்கள்.

3.2.1.வீணைஎன்பதன் பொருள்
3.2.2.இசைக்கருவிகளின் பிரிவுகள்.
3.2.3.சரஸ்வதிவீணையின் அமைப்பும் அதன் பாகங்களும்.
3.2.4.வீணையில் மீட்டும் ஸ்வரங்கள்.
3.2.5.வீணைமீட்டுகள்.
3.2.6.வீணைவாசிப்பவரின் குணச்சிறப்புகள்.
3.2.7.வீணைவாசிப்புப் பாணிகள்.
3.2.8.வீணையின் சிறப்புக்கள்.
3.2.9.சமயப் பெரியார்களின் வீணைபற்றியகருத்துக்கள்.
3.2.10.வீணைபற்றி இசை நூல்களில் கூறப்பட்டவை.
3.2.11.தெய்வங்கள் இசைக்கும்வீணைகள்.
3.2.12.இருக்கு வேதத்தில் வீணையின் அமைப்பு
3.2.13.வேதத்தில் வீணையின் முக்கியத்துவம்.
3.2.14.மனிதஉடலமைப்பினைஉடையவீணை.
3.2.15.இலங்கையில் வீணைவடிவமைக்கும் கைவினையாளர்.

இயல் நான்கு. 97-152

இலங்கைத்தமிழர் இசைமரபில் வீணையிசை.

4.1.பாரம்பரியக்கலைகளில்இசை.

4.2.பண்ணிசை.

4.3.சென்னெறியிசை.

4.3.1.இலங்கையில் வீணையிசைக்கலையின் ஆரம்பம் வளர்சி.

4.3.2.இலங்கையில் வீணையிசைவளர்ச்சியில் வடஇலங்கைசங்கீதசபை.

4.3.3.வீணையிசை வளர்சியில் இசைமன்றங்கள்.

4.3.4.ஆலயங்களில் வீணையிசை.

4.3.5.வெகுசனத் தொடர்புசாதனங்களில் வீணையிசை.

4.3.6.பாடசாலையில் இசைக்கலை.

4.3.7.பல்கலைக்கழகங்களில் வீணையிசை.

4.3.7.1யாழ்ப்பாணம் இராமநாதன் நுண்கலைக்கழகம்.

4.3.7.2.மட்டக்களப்பு சுவாமிவிபுலானந்தஅழகியற் கற்கைகள் நிறுவகம்.

4.3.7.3.கொழும்பு கட்புலதொழில்நுட்பப் பல்கலைக்கழகம்.

4.3.8.வீணையிசைக்கலைஞர்கள்.

4.4.மேலைத்தேயயிசை

4.5.மெல்லிசை

இயல் ஐந்து. 153-187

செயல்மையஆய்வு.

5.1வீணையிசைபற்றிய பாடசாலைமாணவர்களின் கருத்துகள்.

.5.1.1.மட்டக்களப்பு வின்சன்றமகளிர் உயர்தரபாடசாலைமாணவர்களின் கருத்துக்கள்.

.5.1.2.மட்டக்களப்பு களுதாவளைமகாவித்யாலயமாணவர்களின் கருத்துக்கள்.

5.2.வீணையிசை கற்றல்பற்றிய பல்கலைக்கழகமாணவவர்களின் கருத்துகள்169

5.2.1 விபுலானந்தஅழகியற் கற்கைகள் நிறுவகமாணவர்கள்.

5.2.2.விபலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகமாணவர்கள் வீணையிசையை தெரிவுசெய்யாமைக்கானகாரணங்கள்.

5.2.3.தற்காலம் வீணையிசைகற்பித்தல் பற்றியஆசிரியர்களின் கருத்து

இயல் ஆறு. 188-272

வீணையிசைநிகழ்த்திக் காட்டுகையும் உரையாடல்களும்.

6.1.நிகழ்த்திக்காட்டுகையும் உரையாடல்களும் 01.

6.2.நிகழ்த்திக்காட்டுகையும் உரையாடல்களும்: 02 காட்சிப்படுத்தலும்.

6.3.நிகழ்த்திக்காட்டுகையும் உரையாடல்களும்:03.

பரிந்துரைகள். 267

முடிவுரை. 268-270

உசாத்துணை நூற்பட்டியல். 271-272

பின்னிணைப்பு: 1)நிழற்படப்பிரதிகள். 2)இறுவெட்டுக்கள். 273-283

## முன்னுரை

''இலங்கைத்தமிழ் வீணையிசை'' ஒருவரலாற்று ரீதியான விமர்சன ஆய்வு.இவ்வாய்வானது இலங்கையில் வீணையிசை தொடர்பான வரலாற்று விடயங்களையும், வீணைபற்றிய விடயங்களையும் கொண்டதாக அமைந்துள்ளது. இந்தஆய்வு ஆறு இயல்களாக அமைந்துள்ளது. முதலாவது இயல் அறிமுகம், ஆய்வுப்பிரச்சினை, ஆய்வின்முக்கியத்துவம், ஆய்வின்கருதுகோள், ஆய்வின் நோக்கம்,இலக்கியமீளாய்வு,ஆய்வுமுறையியல், ஆய்வுவரையறை,ஆய்வின்அமைப்பு, நீண்டகாலப்பயன்கள் எனும் விடயங்களைக் கொண்டமைந்துள்ளது.

இரண்டாவதுஇயலில் கலை, கலைகளின்பிரிவு, இசைக்கலை, கலைகளின்தோற்றம், இந்தியயிசையில் கர்நாடகயிசைபற்றியவை நூல்களினூடாகவும் இலங்கை எனும் பெயர்பெற்றமை,புராதனகாலத்தில் இலங்கையில் வீணையிசை என்பன பற்றியவை தேவார,பிரபந்த,புராண, இதிகாசக் கருத்துக்களூடாகவும் கூறப்பட்டுள்ளது. வீணையின்பரிணாம வளர்ச்சி பி.சைதன்யதேவா, அ.ஸ்ரீவித்யா ஆகியோரின் ஆய்வு நூல்களினூடாகவும், சங்ககாலம் தொடக்கம் பின்வந்தகால இலக்கியநூல்களி னூடாக வரலாற்றுரீதியாகவும் மூன்னு வகையாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

மூன்றாவது இயலில் வீணையுருவத்தின்தோற்ற வளர்ச்சியூடான சுரங்களின் தோற்றவளர்ச்சி, வீணைபற்றிய தெய்வீகசிந்தனைகள், வேதத்தில்வீணை, வீணையின்அறிமுறை,செயன்முறைசம்பந்தமான விடயங்கள், வீணையின்அமைப்பு, வீணையின்சிறப்பு, இலங்கையில் வீணைவடிவமைப்பவர் என்பன பற்றி ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

நான்காவது இயலில் இலங்கைத்தமிழ் இசைமரபுகளான பாரம்பரியக் கலைவடிவங்கள், பண்ணிசை,செந்நெறியிசை, மேலைத்தேயயிசை, மெல்லிசை என்பனவற்றில் வீணையிசையின் பயன்பாடுஎவ்வாறு அமைந்துள்ளது என்பதோடு, இசைமன்றங்கள், கல்லூரிகளில், பல்கலைக்கழகங்களில் வீணையிசையினைக் கற்றல்,கற்பித்தல்,ஆற்றுகைச் செயற்பாடுகள் என்னவகையில் அமைநுள்ளது என்பதுபற்றியும்,வெகுசனத் தொடர்பு சாதனங்களில், வீணையிசை பங்கு கொண்டமை தொடர்பாகவும் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது.

ஐந்தாவதாவதுஇயலில்,வீணையிசையின் தற்கால நிலைமையை அறிந்து கொள்வதற்காக, செயல்மைய ஆய்வாகப் பாடசாலை மாணவர்களிடம் வீணையிசைதனை கேட்கவைத்துப் பெறப்பட்ட கருத்துக்கணிப்புகளும், தற்காலம்

வீணைகற்பித்தல் பற்றிய ஆசிரியர்,விரிவுரையாளர்களின் கருத்துக்கள் என்பனவும் ஆராய்ந்து கூறப்பட்டுள்ளன.

ஆறாவது இயலானது ஆய்வாளரால் வீணையிசை நிகழ்த்திககாட்டலும், உரையாடலும் எனும் செயல்மைய ஆய்வாக அமைந்து, அதில் பெறப்பட்ட வீணையிசைபற்றிய கருத்துக்களும்,அனுபவப் பகிர்வாகள முத்துமூலம் இவ்விசை பற்றிப் பெற்றகருத்துக்களும் ஆய்வுசெய்யப்பட்டுள்ளன. மேலும் இவ்வியலில் காட்சிப்படுத்தல்மூலம் இலங்கை, இந்திய வீணையிசைக் கலைஞர்களின் படப்பிரதிகள், ஆய்வாளரினதும், ஏனையகலைஞர்களினதும் ஆற்றுகைப் படப்பிரதிகள் என்பவற்றோடு, யாழினூடாக வீணைபரிணாம வளர்ச்சியடைந்தமை வரையான, நரம்பிசைக் கருவிகளின் படப்பிரதிகளும் காட்சிக்கு வைக்கப்பட்டன.இதன்மூலம் அனுபவப் பகிர்வாக எழுத்துமூலம் பெற்ற கருத்துக்கணிப்புகள் கூறப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் வீணையிசைக்கலையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள் கூறப்பட்டுள்ளன.ஒவ்வொரு இயலுக்குமான முடிவுரைகள் கூறப்பட்டுள்ளது. ஆய்வில் ஆய்வாளரால் கண்டறியப்பட்ட ஆய்வுமுடிபுகளும் கூறப்பட்டுள்ளன. பின்னிணைப்பாக கோயிற் சிற்பங்களில் காணப்படும்வீணையின்படப்பிரதிகள், ஆய்வாளர் வீணையிசைக் கலைஞர்களை நேர்கண்டதன்போது எடுத்த படப் பிரதிகள்,வீணையிசை ஆற்றுகையின்போதும், அதன் பின்னர் நடைபெற்ற உரையாடலின் போதெடுத்த படப்பிரதிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

வீணையிசை நிகழ்த்திக்காட்டுகைகளின் மூன்று இறுவெட்டுக்கள் இணைக்கப்பட்டுள்ளன.இதில் வீணையிசை நிகழ்த்திக்காட்டுகை 02இல் காட்சிப் படுத்தலில் வைக்கப்பட்ட படப்பிரதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.இவ்வாறாக இந்த ஆய்வு அமைந்துள்ளது என்பது குறிப்படத்தக்கதாகும்.